மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களை சொந்த நாட்டுக்கு அனுப்புகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஏதாவது பிரச்சினை எழுமானால் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரச்சினையை சுமுகமாக முடிக்கின்ற பணியைச் செய்து வேறு எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அகதிகளுக்கு நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு செய்யும் செலவுத் தொகைக்கு மத்திய அரசால் ஏதாவது மானியம் கொடுக்கப்படுகிறதா? அப்படியென்றால் அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் செலவிடப்படுகின்ற மொத்தச் செலவினமும் முதலில் மாநில அரசால் செலவு செய்யப்படுகிறது. பின்னர் முழுத் தொகையும் மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 235, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

235—

பரமத்தி-வேலூர் வட்டத்தில் பெண்கள் கல்லூரி அமைத்தல்

*33410—**திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டத்தில் புதியதாக பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

1995 ஏப்ரல் 5]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுத் திக்கும் புகழ் பரப்பி, பிறருக்கு எட்டாத இடம்தன்னை அடைந்துவிட்ட என் தலைவி, மக்கள் மன்றத்திலே இன்று சிந்தனைச் சிற்பியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண்ணினத்தின் பாதுகாவலராக, ஆதிதிராவிடக் குழந்தைகள்கூட பள்ளிகளிலிருந்து நின்று விடக்கூடாது என்று அவர்களுக்காக உதவித் தொகைத் திட்டத்தை கொடுத்துள்ளார்கள். இப்படி, பெண்கள் படிக்கவேண்டும், பெண்கள் வாழ்க்கையில் முன்னேறவேண்டும், பெண்கள் தங்கள் சொந்தக் காலில் தானே செயல்பட்டு வாழ்க்கையில் முன்னேற வழிவகுக்கும் திட்டங்களை வாரித் தந்துள்ள புரட்சித் தலைவியின் அரசில் பரமத்தி-வேலூர் வட்டமானது கொடுமுடி வரையிலும், ஈரோடு வரையிலும் — இடையில் காவிரி ஆறு மட்டும் குறுக்கே உள்ளது— பரந்துள்ள பரப்பளவில் பெண்கள் கல்லூரிக்கு வரவேண்டும் என்று சொன்னால் நாமக்கல் பெண்கள் அரசு கல்லூரிக்குத்தான் வரவேண்டும். அவ்வளவு தூரம் பெண்களை பேருந்துகளில் அனுப்புவதற்கு பெற்றோர்கள் முன்வருவதில்லை. மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழும் அந்தப் பகுதியில் பெண்கள் கல்லூரியை நிறுவாவிட்டால் நிச்சயமாக அதுவரையில், பெண்களை பிளஸ்-2-வை விட்டு தாண்டி கல்லூரிக்கு அனுப்ப பெற்றோர்கள் முன்வர மாட்டார்கள். ஆகையால், எதிர்காலத்தில் நிதிவசதி இடம் தருகின்றபோது, கொள்கை அளவில் அரசு கல்லூரியை உருவாக்க முற்படுகின்றபோது அந்தப் பெண்கள் கல்லூரியை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 12 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதிலே 6 கல்லூரிகள் அரசுக் கல்லூரிகள், உதவி பெறும் தனியார் கல்லூரிகள் 4. சுயநிதிக் கல்லூரிகள் 2. அரசின் கடுமையான நிதி நெருக்கடியின் காரணமாகத்தான் புதிய கலைக் கல்லூரிகளைத் தொடங்குவது இல்லை என்று முடிவெடுத்திருக்கிறது. பரமத்தி-வேலூர் வட்டத்தைச் சார்ந்த கல்வி முகமை ஏதேனும் நிதியுதவி பெறாத தனியார் கல்லூரியைத் தொடங்க அனுமதி கோரி விண்ணப்பித்தால் விதிகளின்படி அரசு பரிசீலிக்கும்.

[1995 ஏப்ரல் 5

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழக்கு மேலும் மெருகூட்ட அறிவியல் தமிழை தமிழகத்திற்குக் தந்திட்ட அன்னை, திராவிட இயக்கத்தின் தீபமாக விளங்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் தனியார் கல்லூரி அங்கே இருக்கிறது. கந்தசாமி கண்டர் கல்லூரி இருக்கிறது. ஆனால் தனியார் கல்லூரிகளில் தங்களுடைய குழந்தைகளைப் படிக்க வைக்கக்கூடிய அளவிற்கு வசதி படைத்த மக்கள் அங்கே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பரமத்தி-வேலூர் வட்டம் முழுமையாக கபிலர்மலை தொகுதியை உள்ளடக்கி உள்ளது. அப்படிப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தால் இன்றல்ல, எதிர்காலத்திலாவது இப்படிப்பட்ட அரசுக் கல்லூரியைத் துவங்க கொள்கை அளவில் முடிவு எடுக்கின்றபோது, நிதிநிலை இடம் தருகின்றபோது பரமத்தி-வேலூர் வட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து தேர்வு செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11-00*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அத்தனை நிலைமைகளும் சரியான பின்பு அரசு கொள்கை முடிவெடுக்கும்போது இது குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *236*, திரு. சா. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் *237*, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

237—

பேர்ணாம்பட்டு தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல்

33323*—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—